**விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியம் - 2013**

விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1992 இன் 09 ஆம் இலக்க விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை விழிப்புலனற்றவர்களுக்கான புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| நிதிப் பிரமாணம் 751 | மீளாய்வாண்டின் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 950,556 பெறுமதியான 72 கண்வில்லைகள் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாது அன்பளிப்புப் பெறுவோர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றற்கூற்றின் படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 27,689 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 606,747 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 579,058 தொகையான குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியம் ரூபா 1,000,000 இனால் அதிகரித்த போதிலும் நிறுவகத்தின் செலவினம் ரூபா 1,561,357 ஆல் அதிகரித்தமை முக்கிய காரணமாகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விழிப்புலனற்றோருக்கான சேவைச் சபையால் வார இறுதி நாட்களில் ஒரு நாள் மாத்திரம் நடாத்தப்பட்டு வரும் புனர்வாழ்வு செயற்திட்டத்திற்காக 6 ஆலோசகர்களுக்கும் கண்காணிப்பு உத்தியோகத்தருக்குமாக ரூபா 544,425 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக 15 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் திறனை விருத்தி செய்வதற்காக நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு பயிற்றுவிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை விழிப்புலனற்ற மக்கள் சம்மேளனத்தால் நடாத்தப்படும் அனுராதபுரம் மஹமீகஸ்ஸேகம விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தில் 2013 ஆம் ஆண்டின் போது 12 நபர்களுக்காக ரூபா 666,000 தொகை இலங்கை விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தங்கியிருக்கும் நபர்களின் எண்ணிக்கை தொடர்பான உறுதிப்படுத்தலோ அல்லது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தல், அவற்றின் செயவாற்றல் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படாது அதற்காக ரூபா 374,568 செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டின் பெப்ரவரி முதல் யூன் வரையான 05 மாத காலத்தின் போது இடம்பெற்ற விழிப்புலனற்ற நலன்புரி நிலையத்தில் எவ்வித உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதியத்தின் நோக்கத்தை போதியளவில் எய்தியிராமை

1992 இன் 9 ஆம் இலக்க விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு நம்பிக்கை நிதிய அதிகாரச்சட்டத்தின் 05 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட கீழே காண்பிக்கப்பட்டுள்ள நிதியத்தின் நோக்கத்தை போதியளவில் எய்தியிருக்கவில்லை.

(i) விழிப்புலனற்றோருக்காக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு சுயதொழிலுக்காக நிதியுதவியும் வழிகாட்டல்களும் வழங்கப்படல்.

(ii) விழிப்புலனற்றோருக்காக கலைப் பாடநெறிகளைக் கற்பதற்கோ அல்லது தொழிற்துறைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமான வகையில் அவர்களுக்கு வீட்டுவசதிகளை வழங்குதல்.

(iii) விழிப்புலனற்றோருக்கான நலன்புரிக்கான உத்திதேசத் திட்டங்களை செயற்படுத்தல்.

(iv) விழிப்புலனற்றோரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்காக விற்பனை வசதிகளை வழங்குதல்.

**4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

மீளாய்வாண்டின் போது 15 விழிப்புலனற்றோருக்காக ரூபா 100,000 தொகையான விளையாட்டு உதவி வழங்கப்படுவதற்கான நிதிஏற்பாடு காணப்பட்ட போதிலும் நிதியத்தால் எவ்வித உதவியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டின் வருமான செலவினங்களுக்கும் உள்ளபடியான வருமானச் செலவினங்களுக்கும் இடையே 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) விழிப்புலனற்றோர் புனர்வாழ்வு செயற்திட்டம்
(இ) மாணவர் உதவுதொகைகள்
(ஈ) விழிப்புலனற்ற பெண்கள் நலன்புரி நடவடிக்கைகள்